(Registered as a Newspaper in Ceylon)
P. M. G. NO. H. A. 59/300 of 1939.

யுத்தகாலப் பிரசுரம்

உ
சிவமயம்.

விரோதி ஸு (1889) ஆவணி மீ உஅ உ ஆரம்பமானது

# இந்து சாதனம்

**பத்திரக்கிரயம்**

வருஷம் ஒன்றற்கு யாழ்ப்பாணப்பட்டினசங்கைலக்குள்
தமிழ் ரூபா 5.00 இங்கிலீசும் தமிழும் 9.00
இலங்கை இந்தியா 8.00 இங்கிலீசும் தமிழும் 12.00
தொடுவாய்ப்பகுதி 9.00 இங்கிலீசும் தமிழும் 13.00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமனுப்பிலைவின்றிக் கவனிக்கப்படமாட்டா.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.
—அப்பர் சுவாமிகள்

**விளம்பர விகிதம்**

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 10-00 அரைக்கலம் ரூபா 5-50
கால்கலம் ரூபா 4-00 ஒருஅங்குலம் ரூ. 1.00
அடுத்தமுறைகட்கு மேற்படி விகிதங்களிற்பாதி
காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

[ புத்தகம்—ருக ] யாழ்ப்பாணம்:— பிரமாதி ஸு புரட்டாதி மீ கக உ (1939 ஒக்டோபர் 5 வியாழக்கிழமை) [ இலக்கம் சக ]

## குருலிங்க சங்கமம்

[அச்சுவேலி சிவஸ்ரீ கு. வைத்தீசுவரக் குருக்கள்]

உலகத்திலே சமயங்கள் பல. எல்லாச் சமயத்தாருக்கும் தங்கள் தங்கள் சமயம் இது எனவும், அதற்குரிய கடவுள் இவர் எனவும், அக்கடவுள் ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை ஏற்று அநுக்கிரகம் செய்யும் முறை இது எனவும், அவரை ஆன்மாக்கள் வழிபடும் முறை இது எனவும், அறிதலும் அறிந்தபடி அனுட்டித்தலும் கடனாகும். ஆதலினாலே நம்முடைய சமயக் கிரமத்தை அறிதலும் அறிந்தபடி அநுட்டித்தலும் சைவசமயிகளாகிய எமக்கும் கடனாகுமே.

நாம் எல்லாம் சைவர்கள். சைவர் என்னும் சொற்குச் சிவனை வழிபடுவோர் என்பது பொருள். ஆகவே சிவனை வழிபடுவோர் யாவர், அவர் அனைவரும் சைவர் எனப்படுவர். சைவர் ஆதிசைவரும் மகாசைவரும் அநுசைவரும் அவாந்தரசைவரும் பிரவரசைவரும் அந்தியசைவரும் என அறுவகைப்படுவர். அவருள்ளே ஆதிசைவராவார்: ஆகாதிசைவராகிய சதாசிவமூர்த்தியுடைய ஐந்து திருமுகங்களினும் நிகழ்ந்தக்கப்பட்ட பஞ்சரிஷி கோத்திரத்துச் சிவப்பிராமணர். மகாசைவராவார்: வைதிகப் பிராமணருள்ளே சிவதீக்ஷை பெற்றவர். அநுசைவராவார்: க்ஷத்திரியருள்ளும் வைசியருள்ளும் சிவதீக்ஷை பெற்றவர். அவாந்தரசைவராவார்: சூத்திரருள்ளே சிவதீக்ஷைபெற்றவர். பிரவரசைவராவார்: அறுவகை அநுலோமருள்ளும் சிவதீக்ஷை பெற்றவர். ஒழிந்த சாதியார் எல்லாருள்ளும் சிவனை வழிபடுவோர் அந்தியசைவர் எனப்படுவர். இதனாற் பிராமணர் முதல் புலையரீறாகிய எல்லாச் சாதியாரும் சிவனை வழிபடுதற்குரியர் என்பது பெறப்பட்டது. ஆயினும், வழிபாட்டுக் கிரியைகள் வருணந்தோறும் வேறுபாடுடையனவாம்.

சிவபெருமான் பரந்தித்த சிவலிங்க முதலிய திருமேனியும், குருவும், சங்கமமும் இடமாகக்கொண்டு நின்றும், அகத்தே உயிரிடமாகக் கொண்டு நின்றும் ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை ஏற்று அருள் செய்வர். லிங்கம் என்னும் பதத்துக்கு லிங்-லயம், கம்-சிருட்டி எனக்கொண்டு உலகமும் விட்டுணு முதலிய உயிர்த்தொகைகளும் ஒடுங்குதற்கும் தோன்றுதற்கும் இடமாயுள்ளது எனப் பொருள்படும். லிங்கம் என்னும் சொல்லானது சித்திரித்தல் எனப் பொருள்படுகின்ற லிகி என்னுந் தாதுவினின்றும் பிறந்தமையின், சிருட்டி முதலிய பஞ்சகிருத்தியங்களால் பிரபஞ்சத்தைச் சித்திரிக்கும் பரமேசுரனது பிரபாவமே லிங்கம் எனினும் பொருந்தும். இலிங்கத்தினது விளக்கத்துக்கு இடமாகிய வாணம் சைலம் முதலியவைகளும் உபசாரத்தினால் இலிங்கம் எனப்படும். குரு என்பது அஞ்ஞானத்தை அழித்துச் சிவஞானத்தைக் கொடுத்து அநுக்கிரகிப்பர் எனப் பொருள்படும். அடியார் திருமேனி அசைவுடையதாதலாற் சங்கமம் எனப்படும். சிவலிங்கம் பீடலிங்க ரூபமாய் உள்ளது. லிங்கம் நாதமயமாம். பீடம் பிந்துமயமாம்.

இலிங்கமானது பரார்த்தலிங்கம் எனவும், ஆன்மார்த்த லிங்கம் எனவும் இருவகைப்படும். உலகத்துள்ள ஆன்மாக்கள் அனைவரையும் அநுக்கிரகிக்கும்பொருட்டு, தேவர்களாலும் இருடிகளாலும் மனிதர்களாலும் கிராமங்களில் விதிப்படி விசேஷமாகத் தாபிக்கப்பட்ட லிங்கம் பரார்த்தலிங்கம் எனப்படும். அதுவே திருக்கோயிலுள்ளிருக்கும் லிங்கம். எல்லாருக்கும் தங்கள் ஆன்மாட்சையின் பொருட்டுத் தத்தம் கிரகத்திற் பூசிக்கும் இட்டலிங்கம் ஆன்மார்த்தலிங்கம் எனப்படும் என்று காரணாகமம் கூறுகின்றது. ஆசாரியர் விசேஷதீக்ஷை செய்து சீடனை நோக்கி 'நீ உன்னையும் கைவிடாது இவரை காப்போறாய் பூசி' என்று அநுமதி செய்து, 'அடியேன் சரீரம் உள்ளளவும் சிவபூசை செய்தன்றி, ஒன்றும் உட்கொள்ளேன்' என்று பிரதிக்ஞை செய்வித்துக்கொண்டு கொடுக்க, அவன் வாங்கிப் பூசிக்கும் லிங்கம் இஷ்டலிங்கம் எனப்படும்.

சுயம்புலிங்கம், தேவிலிங்கம், திவ்யலிங்கம், ஆர்ஷலிங்கம், மானுடலிங்கம், இராக்ஷசலிங்கம், ஆசுரலிங்கம் எனப் பரார்த்தலிங்கம் ஏழு வகைப்படும். தானே தோன்றியது சுயம்பு லிங்கம். இது பர்வதாகாரமாய் உள்ளது. தேவியினாலே பூசிக்கப்பட்ட லிங்கம் தேவிலிங்கம். தேவர்களாற் ருபிக்கப்பட்டது தைவிக லிங்கம். முனிவர்களாற் ருபிக்கப்பட்டது ஆர்ஷலிங்கம். மானுடராற் ருபிக்கப்பட்டது மானுடலிங்கம். அசுரர்களாலும் இராக்ஷதர்களாலும் பூசிக்கப்பட்டது ஆசுரலிங்கமும் இராக்ஷதலிங்கமும் எனப்படும். விநாயகர் சுப்பிரமணியரால் தாபிக்கப்பட்டது காணலிங்கம் எனப்படும்.

சிதம்பரத்திலுள்ள பர்வதாகார திருமூலத்தானலிங்கம் போன்றன சுயம்புலிங்கமாம். காஞ்சிபுரத்திலே ஏகாம்பரத்தில் காமாக்ஷி அம்மையாற் பூசிக்கப்பட்ட ஏகாம்பரநாத மகாலிங்கம் தேவிலிங்கமாம். திருச்செங்காட்டங்குடியில் விநாயகர் தாபித்துப் பூசித்த கணபதீச்சுர மகாலிங்கம் முதலியனவும், திருச்செய்ஞலூரில் சுப்பிரமணியக் கடவுள் தாபித்துப் பூசித்த சத்திகிரீசுர மகாலிங்கம் முதலியனவும் காணலிங்கம் எனப்படும். பிரமாவினாலே சீகாழியில் தாபித்துப் பூசிக்கப்பட்ட பிரமபுரீச மகாலிங்கமும், திருமாற்பேற்றில் விட்டுணு பூசித்த மால்வணங்கீசுர மகாலிங்கமும், விட்டுணு வாமனவதாரம் செய்து திருமாணிக்குழியில் தாபித்துப் பூசித்த மாணிக்கவரதேசுர மகாலிங்கமும், திருக்கண்ணார்கோயிலில் இந்திரன் தாபித்துப் பூசித்த கண்ணாயிரமகாலிங்கமும் தைவிகலிங்கமாம். திருக்குற்றாலத்தில் அகத்தியரால் தாபித்துப்பூசிக்கப்பட்ட குறும்பலாவீசுரமகாலிங்கம் ஆர்ஷலிங்கமாம். இடும்பாவனத்தில் இடும்பனால் தாபித்துப் பூசிக்கப்பட்ட சற்குணநாதேசுரமகாலிங்கம் இராக்ஷசலிங்கமாம். திருவாணைக்காவில் ஒணன், காந்தன் என்னும் இரு அசுரராற் பூசிக்கப்பட்ட ஓணகாந்தேசுரமகாலிங்கம் அசுரலிங்கமாம். இராமேசுரம் முதலாகிய பன்னிரண்டு தலங்களில் தாபிக்கப்பட்ட மகாலிங்கங்கள் சோதிலிங்கம் எனப்படும்.

கிருத்தமாத்திரத்தில் பாவங்களை நீக்கவல்ல பஞ்சபூத மகாலிங்கங்கள்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

### திருமாந்துறை—பண்—நட்டராகம்

மந்தமார் பொழின் மாங்கனி மாந்திட
மந்திகண் மாணிக்கம்
உந்திநீர்வரு காவிரி வடகரை
மாந்துறை யுறைவானை
சிந்தியாவெடுத் தார்த்தவல் லரக்கனை
நேரித்திடு விரலானைச்
சிந்தியாமனத் தாரவர் சேர்வது
தீநெறி யதுதானே.

—சம்பந்தசுவாமிகள்.

## அகில இந்தியக் காங்கிரஸ் நிருவாகசபை

### வார்தாவிலேயே கூடும்

காரிய நிர்வாக சபை மாத்திரம் டில்லியில் நடக்கலாம்

வார்தா செப் 28

காங்கிரஸ் தலைவர் டக்டர் ராஜேந்திரப் பிரசாத் ஒக்டோபர் மீ 3-ந் திகதி இராஜப் பிரதிநிதியைக் காண்பார். யுத்தக்கமிட்டிச்சபைத் தலைவர் பண்டித ஜவஹரும் அப்பொழுது வைஸ்ராயைக் காண்பார்.

இன்று மாலை மகாத்மா வார்தா வந்து சேருவார். இவர் வந்த பிறகு தான் காரிய கிருவாகசபைக் கூட்டம் எங்கு நடப்பதென்பது முடிவாகும். மூன்றாந் திகதி பிரதான தலைவர்கள் டில்லியில் இருப்பார்களாகையாலும் வைஸ்ராயைக் கண்டு பேசிய பிறகு ஏதாவது ஒரு முடிவு செய்ய வேண்டியிருக்குமாதலாலும் காரிய நிருவாகசபைக் கூட்டத்தை டில்லியிலேயே நடத்தலாம் என்ற ஓர் உத்தேசமிருக்கிறது. ஆயின், அகில இந்தியக் காங்கிரஸ் நிருவாகசபைக் கூட்டம் வார்தாவில்தான் நடக்கும். அதற்கான ஏற்பாடுகள் அங்கு நடந்து வருகின்றன. ராஜன் பாபுவும் ஜவஹரும் இராஜப் பிரதிநிதியைக் காணுவதாற் காங்கிரஸ்கொள்கை இன்னும் தெளிவாகி விடுமெனத் தெரிகிறது. சர்தார் படேலுக்கு இன்னும் வைஸ்ராயின் அழைப்பு போய்ச்சேரவில்லை. அவர் இன்றுமாலை வார்தாவுக்குப் போய்க் காந்திஜியுடன் டில்லிக்குப் போவார் எனத் தெரிகிறது.

## ஒரே நாளில் மூன்று மரண விசாரணைகள்

### பாணந்துறை நீதிபதியின் சுறுசுறுப்பு

சென்ற வெள்ளிக்கிழமையன்று பாணந்துறை நீதிபதி தனது கோட்டுக் கடமைகளுடன் பொல்கொடை ஹொரணை, கெஸ்பேவா ஆகியமூன்று பகுதிகளில் நடந்த மூன்று கொலைகள் சம்பந்தமாக விசாரணை செய்யவும் நேரிட்டது.

பொல்கொடையில் கே. ஜே. ரணசிங்க என்னும் 17 வயதுச் சிறுவன் வியாழக்கிழமையன்று அதே இடத்தைச் சேர்ந்த கே. சில்வன் பெர்னாண்டோ என்பவரால் குத்திக் கொலைசெய்யப்பட்டாராம்.

ஹொரணைச் சம்பவம்

ஹொரணைப் பகுதியைச் சேர்ந்த கொரக்கொடையில் எச். டோபின் சோ பீரிஸ் என்னும் ஒரு விவசாயி மீது அதே இடத்தைச் சேர்ந்த எல்மோசன் ஒரு கல்லை விசினார். அது மார்பிற பட்டது காரணமாகப் பீரிஸ் மாரணமடைந்தாராம்.

எதிரி தலைமறைவாயிருப்பதாகக் கூறப்பட்டதும, நீதிபதி அவர்மீது விருந்து பிறப்பித்தார்.

## 'பழைய பல்லவி வேண்டாம்'

### 'காங்கிரஸ் காரிய நிருவாகசபையின் கேள்விக்குத் தகுந்த பதில் வேண்டும்'

### நேருஜீயின் கேள்வி

அலகபாத் செப் 30

பிருத்தானிய பிரபுக்கள் சபைக் கூட்டத்தில் இந்தியா மந்திரி ஸெட்லாந்து பிரபு இந்தியா சம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கை பற்றிப் பண்டித ஜவஹர்லால் நேரு பின்வரும் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்.

காங்கிரஸ் காரியநிருவாகசபையின் யுத்த நிலைமை அறிக்கையைப்பற்றி எவ்வித அபிப்பிராயம் கூறப்பட்ட போதிலும், அது தெளிவாக இல்லை என்று எவரும் குறைகூறமுடியாது. காரியநிருவாகசபை உறுதியான பதிலை எதிர்பார்க்கும் தெளிவான கேள்விகளைக் கேட்கிறது.

அந்தக் கேள்விக்கு ஸெட்லாந்து பிரபு ஏன் இன்னும் மறுமொழி அளிக்காமலிருக்கிறார்? இன்னும் அவர் பழைய விஷயங்களையே பேசுகிறார். அவர் நேற்றுப் பிரபுக்கள் சபையிற் பேசிய பேச்சை இருபது வருடங்களுக்கு முன்னதாகப் பேசியிருந்தால் அது மிகவும் பொருத்தமாக இருந்திருக்கும்.

தற்போது எழுந்துள்ள விவகாரங்கள் நன்கு விளக்கப்படாமல், சமர் தொடர்ந்து நடைபெறுமானால், கொடுமையான அபாயங்கள் ஏற்படும்.

ஸேர். ராதாகிருஷ்ணனின் அதிருபதி

கல்கத்தா செப் 30

கல்கத்தா சர்வகலாசாலை மாணவர்களும் போராசிரியர்களும் கூடியிருந்த ஒரு கூட்டத்திற்குக் காசிச் சர்வகலாசாலை உப அத்தியக்ஷகர் ஸேர். ராதாகிருஷ்ணன் அக்கிராசனம் வகித்தார். அவ்வமயம் அவர் கூறியதாவது:-

பிரபுக்கள் சபையில் ஸெட்லாந்து பிரபு இந்தியாவைக் குறித்து விடுத்துள்ள அறிக்கை இந்திய மக்களின் உண்மையான மனோபாவத்தை விளக்குவதாயில்லை. இந்தியா சம்பந்தமாகப் பிருத்தானிய அரசாங்கத்தின் கொள்கை எத்தகையதென்பதைத் திட்டமாக அறிவிக்கும்படி காங்கிரஸ் கோருகிறது.

தற்போதுவற்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தைப் பிரிட்டன் தகுந்தமுறையிற் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனவெண்ணுமானாற் பொதுஜன அபிப்பிராயத்தின் மனக் கசப்பை மாற்றவும், பொதுவான அரசியல் லட்சியம்—பொதுவான கொள்கைகளையுடைய அரசாங்கம் ஆகியவைகளின் மூலம் நேசப்பான்மையான முறையில் இங்கிலாந்தையும் இந்தியாவையும் இணைக்க அரும் பாடு படும் மகாத்மா காந்திக்கும் அவரது சகாக்களுக்கும் பிரிட்டன் பலமுள்ள ஆதரவைக் காட்டவும் வேண்டும்.

இந்தியா மந்திரியின் அறிக்கை

சென்ற புதன்கிழமையன்று பிரபுக்கள் சபையில் மீண்டும் இந்திய விவகாரம் பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஸ்நெல் பிரபு க்ரூ பிரபு ஆகியோர் பேசியபின், இந்தியா மந்திரி ஸெட்லாந்துபிரபு பின்வருமாறு பதிலளித்தார்:-

"இப்போதுள்ளதைவிட இன்னும் அதிகமான சுயாட்சி வேண்டுமெனக் காங்கிரஸ்தலைவர்கள் வற்புறுத்தியது இயற்கையே என்றும், ஆயின், அங்ஙனம் வற்புறுத்துவதற்கு இது சரியான சமயமல்லவென்றும் ஸ்நெல் பிரபு கூறினார். அஃது இயற்கையே என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். காங்கிரஸ் அரசாங்கங்களின் தலைவர்களிற் பலரை எனக்குத் தெரியும். அவர்கள் தீவிர தேசபக்தி வாய்ந்தவர்கள். அவர்கள் சில சமயங்களில் வானத்தை நோக்கிக் கொண்டு கீழே காலுக்கு முன்பேயுள்ள இடுக்கண்களைக் கவனிக்காமலிருந்து வருகின்றனர்.

இந்தச் சமயத்தில் அவர்கள் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தியிருப்பது இயற்கையாயிருக்கலாமென ஒப்புக்கொள்ள நான் ஆயத்தமாயிருக்கிறேன். எனினும் அக்கோரிக்கைகளை வற்புறுத்த அவர்கள் இந்தச் சமயத்தைப் பொறுக்கியெடுத்தது துர்ப்பாக்கியவசமென்றே நான் எண்ணுகின்றேன். நான் இங்ஙனம் சொல்வதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

"எனது வருத்தம்"

இன்னொரு காரணத்தை முன்னிட்டும் நான் வருத்தமடைகிறேன். இப்பொழுது நிருவாகத் துறையில் ஏராளமான இந்தியத் தேசிய வாதிகள் அநுபவம் பெற்று வருவது இந்தியாவுக்கு ஒரு மகத்தான அநுகூலமாகும் என்று ஸ்நெல்பிரபு கூறியதை நான் அங்கீகரிக்கின்றேன். இந்த நெருக்கடியான நிலைமையில் அவர்கள் மாகாண அரசாங்கங்களிலிருந்து விலகிக்கொள்ள நேருமாயின், அஃது ஒரு மகத்தான கொடுமையாகும். தங்கள் முன்புள்ள விவகாரங்களைச் சமாளிப்பதற்கான திறமை தங்களுக்குண்டென்பதை அவர்கள் நிரூபித்திருக்கின்றார்கள். அவர்கள் உன்னதமான உணர்ச்சியுடன் தங்கள் மாகாணக் கவர்னர்களுடன் ஒத்துழைத்து வந்திருக்கின்றார்கள். யுத்தம் காரணமாக கடைமுறைக்குக் கொண்டுவர வேண்டிய நடவடிக்கைகளை நிறைவேற்றி வைக்கும் விஷயத்தில் அவர்கள் இதுவரை ஒத்துழைத்து வந்திருக்கும் முறை போற்றத்தக்கதாகும். எனவே, நான் காங்கிரஸ் தலைவர்கள் இந்தச் சமயத்தில் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தியது தவறென்று நான் நினைப்பதாகச் சொல்லுகிறேன்.

கெஸ்பேவாச் சம்பவம்

கெஸ்பேவாப் பகுதியில் ஜோசா என்ற தொன் அர்னோலிஸ் என்பவர் கழுத்திற் கத்தியால் ஏற்பட்ட ஒரு காயத்தோடு பாலகமையைச் சேர்ந்த பதுவெலத் தோட்ட ரோட்டில் இறந்து கிடக்கக் காணப்பட்டார். இதுவரை ஒருவரும் இது விஷயமாகக் கைதுசெய்யப்படவில்லை.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல்வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: பிரமாதி ஞு புரட்டாதி மீ கசுஉ வியாழக்கிழமை


## அரசினர் ஊட்டுங்கல்வி படும்பாடு

நாகரிகத்திற் சிறந்த பிருத்தானியர் தம்பிரசைகளாகிய இந்த இலங்கை மக்களுக்கு ஊட்டிவருங் கல்வியின் நிலைமை மிகவுங் கேவலமான தென்பது எல்லாருமறிந்த இரகசியங்களுள் ஒன்று. நமது பிருத்தானிய அரசினர் இவ்விலங்கையைக்கைப்பற்றிப் பரிபாலிக்கத் தொடங்கி நூற்றைம்பது வருடங்கள்வரையில் ஆகின்றன. இப்படியாகியும் இந்த இலங்கை அரசினர் பொறுப்பில் உயர்தரக்கல்வி ஒருகாலத்தும் ஆங்கிலத்திலேனும் சுய பாஷைகளாகிய தமிழ் சிங்களத்திலேனும் இற்றைவரையில்இங்குள்ள மக்களுக்கு ஊட்டப்படவில்லையெனலாம். முன்னரும் இலங்கை மாணவர்கள் உயர்தர ஆங்கிலக் கல்வி பயில வேண்டின் சென்னைச் சர்வகலாசங்கம் கல்கத்தாச் சர்வகலாசங்கம் என்னும் இந்திய சர்வகலா சங்கங்கள் வாயிலாகவே இங்குங் கல்வி பெற வேண்டியவர்களாயிருந்தார்கள். இந்திய சர்வகலாசங்கங்கள் வாயிலாகஅக்காலத்திற பெற்றுவந்த கல்வி திறமை வாய்ந்ததென்று அநுபவப்பட்டோர் சொல்லுவர்; பொருட்செலவும் அக்கல்வியைப் பயிலும் விஷயத்தில் அதிகமில்லையெனலாம். இந்திய சர்வகலா சங்கங்கட்கும் இந்நாட்டிற்குமிடையேயுள்ள கல்வித் தொடர்பை இற்றைக்கு 32வருடங்கட்கு முன் இல்லாமற் செய்தவர் அககாலத்தில் இந்திய பிரதிகாவலராக விருந்த லார்ட்கேர்ஸனுவர். அதன் பின்பே, இலங்கை மக்களின் கல்வித்திறமை குன்றத்தலைப்பட்டது.

இந்திய சர்வகலா சங்கங்களின் கல்வித் தொடர்பு இங்கு இல்லாதொழிய, லண்டன் சர்வகலாசங்கத்தார், கேம்பிரிஜ்சர்வகலாசங்கத்தார் தங்கட்கு உரிய உயர்தரப் பரீட்சைகளை இங்குள்ள வித்தியா பகுதியார் மூலமாக இலங்கையிலும் நடத்திவருவாராயினர்; அச்சங்கங்கள் வாயிலாக நடத்தப்படும் பரீட்சையாற் பிள்ளைகளுக்குள்ளகல்விச் செலவு காலந்தோறும் அதிகப்படலாயிற்று; கல்வியின் திறமையைவிட்டு அதிகம் பாராட்டிச் சொல்லுதல்இசையாது. எங்ஙனமாயினும், அச்சர்வகலா சங்கங்கள் வாயிலாகப் பல வருடங்களாகப் பரீட்சைகள் கிரமமாக வைத்து நடத்தப்பட்டு வந்தன. பரீட்சைக்குரிய நிபந்தனைகளெனிலோ காலந்தோறும் மாறிக்கொண்டேயிருக்கின்றன. இந்நிங்ஙனமாக, இப்பொழுது அயிரோப்பியயுத்தம் மூண்டுவிட, லண்டன் கேம்பிரிஜ் என்னுஞ் சர்வகலாசங்கங்களின் பரீட்சையை ஆங்காங்குள்ள சர்வகலாசங்க அதிகாரிகள் தேதிவரையறையின்றி நிறுத்தவைத்துவிட்டனர்; இதனால் இங்குள்ள மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், வித்தியாதாபனங்களின் அதிகாரிகள், புத்தகவியாபாரிகள் முதலானோர்க்கு ஏற்பட்ட சஞ்சலங் கொஞ்சமல்ல; இலங்கைக்கு என ஒருசர்வகலாசங்கமேனுமிருக்குமாயின் இப்படியான கஷ்டங்களும் கல்விக்கு இடையூறும் சஞ்சலமும் நேராமற்போயிருக்குமன்றோ? எனினும் பேராதனையிற் கட்டத்தொடங்கிய சர்வகலாசங்கமும், யுத்தம் நடத்தலால் இப்போதைக்கு நிறைவேறுமெனக் காத்திருக்க வொண்ணாது; இலங்கையிலே கல்விப்பஞ்சம் எப்பொழுது நீங்குமோ நாம் அறியேம்.

---

## கார் தட்டி விழ்த்திய மாது

### ஆஸ்பத்திரியில் உயிர் துறந்தார்

இன்னும் கார் கண்டுபிடிக்கப் படவில்லை

சென்ற செவ்வாய்க் கிழமை (2-10-39) பிற்பகல் 5-30 மணிவரையில் நவாலியில் வசிக்கும் வேலுப்பிள்ளை கந்தையா வென்பவருடைய வீட்டிற்குக் கிட்டச் செல்லம்மா வென்னுமோர் வயோதிக மாதை யாரோ அவ்வழியாற் சென்ற கார்க்காரர்கள் தட்டி விழ்த்தி விட்டதாகவும் அம்மாது அவ்விடத்திலேயே அறிவு மயங்கிக் கிடந்ததாயு மறிகிறோம். இச் சம்பவம் நடந்த இடத்திலேயுள்ள அயலவர்கள காயமுற்ற மாதை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றதாயும் அங்கு அவருடைய நிலை மிக்க ஆபத்தானதென வறிந்த அதிகாரிகள் பொலிசாருக்கு அறிவிக்கப் பொலிசார் நீதிபதியிடம் அறிவித்தனர். அவர் காயக்காரியுடைய வாய்முறைப்பாட்டைப் பதிவு செய்யச் சென்றபோது அம் மாது வாய் முறைப்பாடு கூறமுடியாதநிலையிலிருந்ததாயுமறிகிறோம். பின்னர் அம்மாது ஆஸ்பத்திரியில் உயிர் துறந்துவிட்டதாகவும் தெரிகிறது. இம் மாதை எந்தக் கார் தட்டிவிழ்த்தியதென்று இன்னும் கண்டுபிடித்துக் கொள்ள முடியவில்லையெனப் பொலிசாரிடமிருந்து அறிகிறோம். இறந்தவருக்கு உடம்பிற் கால், கை, தலை முதலிய இடங்களிற் காயங்கள் காணப்பட்டதாயும், திடீரெனச் சம்பவித்த அதிர்ச்சியாலும் மண்டை ஓடு உடைந்தமையாலும் அவர் இறந்ததாகவும் டாக்குத்தர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

சிதாரிஉடையார் S.F.X. அண்ணாசாமி உடையார் மரண விசாரணையை நடத்தியதாயும் அப்போது கோனோசர் அழகரத்தினத்தினதும் சின்னவன் தப்பு என்பவனுடையதும் வாய் முறைப்பாடுகளைப் பதிவுசெய்ததாயுமறிகிறோம். நமதுநிருபர்.

---


### பல்வைத்திய விளம்பரம்

யப்பானியப் பல் வைத்தியரான எஸ். இமாய் என்பவர் யாழ்ப்பாணம் பெரிய தெருவிலுள்ள திருச்செல்வம் பில்டிங்கில் அக்டோபர்மாதம் 7-ந் திகதி தொடக்கம் 16-ந் திகதிவரையில் பல்வைத்தியம் செய்யும் பொருட்டாகத் தங்கியிருப்பார்.

Mis 163 5-10-39


---

## அறையில் தூங்கிய அரிவை

அடித்துத் தூக்கியதாக டக்றரின் அபிப்பிராயம்

நாரந்தனையில் வசிக்கும் அந்தோனி பெண் மரியாயென்னும் முப்பது வயதுடைய பெண் தனது வீட்டு அறையொன்றிலுள்ள மரத்திற் கயிற்றை மாட்டித் தனது கழுத்திற் சுருக்கிட்டு இறந்ததாக அறிகிறோம். இச்சம்பவத்தன்று அவருடைய புருஷனாகிய அந்தோனி களனுச் சிவசு சென்று காலை 11 மணியளவில் விடு திரும்பியபோது இதனைக்கண்டு பொலிசாருக்கு அறிவித்தான். ஊர்காவற்றுறை டாக்குத்தர் பிரேதத்தைச் சோதனை செய்தபோது அவளை யாரோ அடித்துத் தூக்கியதாக அபிப்பிராயம் தெரிவித்தார் எனத் தெரிகிறது. இச்சம்பவத்தையறிந்த யாழ்ப்பாணம் உதவிச் சுப்பிரின்டென்டன் A. C. பெர்னுன்டோவும் உதவி இன்ஸ்பெக்டர் E. C. கொப்பனுமிடத்திற்குச் சென்று விசாரணை செய்தனர். இவர்கள் இறந்தவளின் புருஷனாகிய அந்தோனியையும் அயலவனாகிய மாரதலையும் மல்லாகம் கோட்டிற் கொண்டுவந்து இச்சம்பவம் சம்பந்தமாக நிறுத்தினர். நீதிபதி இவர்களை விளக்கமறியலில் விட்டார்.

ந-நி.

---

# இங்கிலாந்திற்கு எச்சரிக்கை

## ஏகாதிபத்திய வெறிபிடித்தவரின் பழைய பாஷை

### மகாத்மா கூறும் மணிமொழி

இங்கிலாந்திற் பிரபுக்கள் சபையில் இந்திய மந்திரி ஸெட்லன்ட் பிரபு இந்தியக் காங்கிரஸ் காரிய நிருவாக சபையின் கோரிக்கைபற்றிப் பேசிய விபரமும் இது சம்பந்தமாக நடந்த விவாதமும் வாசகர்களுக்குத் தெரியும். அதுபற்றி மகாத்மாகாந்தி அவர்கள் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றார்கள். அதன் விபரம் வருமாறு:-

வார்தா செப் 28

இந்திய விவகாரங்கள் பேரிற் பிரபுக்கள் சபையில் நடந்த விவாதத்தைப்பற்றி ராய்ட்டர் தந்திகள் எனக்குக் காட்டப்பட்டன. இந்நிலையில் நான் மௌனஞ் சாதித்தால் அதனால் இந்தியா இங்கிலாந்து இவ்விரண்டின் நன்மைக்கும் பாதகம் விளைத்தவனுவேன். காங்கிரஸின் அந்தஸ்துக்குச் சிறிதும் பொருத்தமில்லாதவாறு அதனை இதர ஸ்தாபனங்களோடு ஒப்பிட்டுப் பேசுவது பிருத்தானிய அதிகாரிகளின் பழைய முறை. பிரபுக்கள் சபை விவாதத்தில் அந்தப் பழைய முறையே கையாளப்படுமென்று நான் எதிர்பார்க்கவில்லை.

காங்கிரஸ் அகில இந்திய பிரதிநிதித்துவம் வாய்ந்ததென்று நான் வற்புறுத்திச் சொல்லுவேன். 50 வருஷகாலத்திற்கு மேலாக ஜாதிமத வித்தியாசமின்றி இந்திய மக்களுக்கு ஏக பிரதிநிதித்துவ ஸ்தாபனம் காங்கிரஸே. இதிற் போட்டியும் இருக்கவில்லை. முஸ்லிம்களின் நன்மைக்கோ அல்லது சமஸ்தான பிரஜைகளின் நன்மைக்கோ காங்கிரஸ் எவ்விதத்திலும் விரோதமாக இருக்கவில்லை. காங்கிரஸ் சமஸ்தான பிரஜைகளின் நன்மைக்காகவும் பாடுபட்டு வருகிறதென்பதும் அப் பிரஜைகளுக்கும் பிரதிநிதியாக இருக்கிற தென்பதும் சமீப வருஷங்களிற சந்தேக மறத் தெளிவானது.

அத்தகைய ஸ்தாபனமே பிருத்தானியரின நோக்கங்கள் என்னவென்பதைத் தெளிவாக அறிவிக்கும்படி கேட்டது. பிருத்தானியர் எல்லாருடைய சுதந்தரத்திற்காகவும் போராடுகிறார்களென்றால், அப்பொழுது அவர்களின் பிரதிநிதிகள் இந்தியாவின் சுதந்தரமும் யுத்த லக்ஷியத்திற் சேர்க்கப்பட்டிருக்கிற தென்பதைத் தெளிவான பாஷையில் அறிவிக்க வேண்டும். அத்தகைய சுதந்திரத்தின் உருவத்தை இந்தியர் மட்டுமே தீர்மானிக்கவேண்டும். (சுய நிர்ணய உரிமை வற்புறுத்தப்படுகிறது.)

சாவதா வாழ்வதா என்னும் போராட்டத்தில் பிரிட்டன் ஈடுபட்டிருக்கும் இந்நிலைமையில் பிருத்தானிய நோக்கங்களைத் தெளிவாக அறிவிக்க வேண்டுமென்று காங்கிரஸ் மகாசபை கேட்கலாமா என்று செட்லண்ட் பிரபு குறைகூறுகிறார். அப்படி அவர் குறை கூறுவது தவறு.

பிருத்தானிய நோக்கங்களைத் தெரிவிக்கும்படி காங்கிரஸ் கேட்டது நாதனமானதோ அன்றி அகௌரவமானதோ அன்று. சுதந்திர இந்தியாவின் உதவி மாத்திரமே சிலாக்கியமானது.

யுத்தம் முடிந்ததும் பிரிட்டனைப் போலவே இந்தியா சுதந்திரநாடாவது நிச்சயம் என்பதை ஜனங்களிடம் சென்று சொல்லக்கூடுமென்று காங்கிரஸ் சபை பிருத்தானியரிடமிருந்து தெளிவாக அறிந்துகொள்ள ஒவ்வொரு வகையிலும் உரிமைபெற்றிருக்கிறது.

ஏகாதிபத்திய வெறி பிடித்தவரின் பழைய பாஷையை மறந்துவிட்டு ஏகாதிபத்திய விலங்கிலுற் கட்டுண்டிருப்பவர் அனைவருக்கும் புதிய அத்தியாயத்தைத் திறக்கும்படி பிருத்தானிய ராஜதந்திரிகளுக்கு நான பிருத்தானியரின் நண்பன் என்ற முறையில் அறிவுறுத்துகிறேன்.

---

# இத்தாலியின் அபிப்பிராயம்

## ருஷிய - ஜெர்மன் உறவுபற்றிச் சந்தேகம்

ரோமாபுரி செப் 30—

ருஷியாவுக்கும் ஜெர்மனிக்குமுள்ள உளவுகளைப்பற்றியும் அவை கிழக்கைரோப்பிய நிலைமை எவ்வாறு பாதிக்கின்றன என்பதைப்பற்றியும் இங்கு நுணுக்கமாகக் கவனிக்கப்பட்டுவருகிறது. இந்த உறவு எவ்வளவு தூரம் ஸ்திரமானதாக இருக்கும் என்பது பற்றி இங்கு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. ருஷியாவுக்கும் ஜெர்மனிக்குமிடையிற பிணக்கு நிச்சயமாக ஏற்படுமென்று அநேகமாக இங்குள்ள எல்லோரும் கருதுகின்றார்கள்.

### ருஷியாவின் நோக்கத்திற்கு இத்தாலி தடை

பால்கன் சமாதானக்கோஷ்டி என்றழைக்கப்படும் விஷயம் தனது விசேஷ காரியமென்று இத்தாலி எப்பொழுதும் கருதிவந்துள்ளது. முழுவதும் ஸ்லாவ் ஜாதியினரைக்கொண்ட ஒரு கோஷ்டிக்குத்தான் தலைமையாக இருக்கவேண்டும் என்பது ருஷியாவின நோக்கமாக இருக்குமாயின் இந்தச் செல்வாக்கிற்குப் பலத்த தடை ஏற்படும்.

இப்போதைக்கு ருஷிய-ஜெர்மன் சம்பாஷணைகள் பற்றி மிகுந்த கிரதை ஏற்பட்டிருக்கிறது. கூடிய விரைவில் பெஸரேபியா ருஷியாவுக்கு இணையாகிவிடும் என்று கருதப்படுகிறது. ஆயின் ஹங்கேரிக்கு அபாயமில்லையென்று எண்ணப்படுகிறது.

இத்தாலியைப் போன்ற ஒரு கத்தோலிக்க தேசம் ருஷியா விஷயமாக மிகுந்த ரோஷமுள்ளதாகவிருக்கும். போலந்து உடனே சோவியத் மயமாக்கப்படுகின்றதென்ற செய்திகள் இங்கு ஆழ்ந்த உணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றன. யுத்தத்தை இங்கு எவரும் விரும்பவில்லை. ஆயின யுத்தத்தினால் ஆபிரிக்காவிலிருந்தும் இத்தாலிக்குள்ள அபிலாஷைகள் பூர்த்தியாவதற்கு வழி திறக்கப்படவேண்டுமென்பது மாத்திரம் விரும்பப்படுகிறது. ஆயின், இந்த ஆசைகள் சமாதானமான வழிகளாற் பூர்த்தி செய்யப்படக்கூடியவை என்று இங்கு கருதப்படுகிறது.

மறுபக்கத்தில் பிரிட்டனுடும் பிரான்ஸோடுமாவது வர்த்தகத்தை உற்சாகப்படுத்த இங்கு ஒரு விருப்பமேற்பட்டிருக்கிறது.

ருஷியா மேற்கு முகமாகத் தனது எல்லையை விஸ்தரித்து வருவதனால் ஏற்படும் விளைவுகள் ஒரு பிரதான விஷயமாகும்.

---

## வங்காளியச் சிறையாளர்

### மேற்கொண்டும் நால்வர் விடுதலை

கல்கத்தா டம்டம் சிறையிலிருந்து ராஜீயச் சிறையாளர் நால்வர் விடுதலை செய்யப்பட்டனர். இதுவரை உண்ணாவிரதம் நிறுத்தப்பட்டபின்பு மறக்குறையப் பன்னிரண்டு சிறையாளர்கள் விடுதலையடைந்திருக்கின்றனர்.

---

## பாலத்தின் அடியி[ல்] பிரேதம்

### நியூமோனியாவுக்குப் பலியாகிக் கிடந்த அநாமதேயப் பேர்வழி

அம்பலாந்தோட்டை பெலியின் ரோட்டிலுள்ள ஒரு பாலத்தின்கீழ்ச் சென்றவாரம் ஓர் இனந்தெரியாத சிங்களமனிதனின் சடலம் காணப்பட்டது. பிரேதப் பரிசோதனையில் அவர் நியூமோனியாச் சுரத்தால் இறந்ததாகத் தெரிய வந்தது. மரண விசாரணை அதிகாரியும் அவ்வாறே தனது விசாரணையிற் குறிப்பிட்டார்.

---

## காயம் விளைத்த வழக்கு

---

## விளக்கில்லாமற் சயிக்கிள் ஓடுவோர்

### பலர்மீது வழக்குகள்

3—10—39

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் நீதிபதி திரு. E. V. R. சமரவிக்கிரம முன்னிலையிற் சயிக்கிளில் விளக்கில்லாமல் இராக்காலத்தில் ஓடித்திரிவோர்மீதும் சயிக்கிளின் பின்புறத்தே இன்னொருவரை ஏற்றிச் செல்லுவோர்மீதும் கடந்த இரு வாரங்கட்கிடையில் தொடரப்பட்ட வழக்குகள் அனேகம். இவர்கட்கு நீதிபதி அனேகமாக ரூபா 3 அபராதம்விதித்துவந்தார். இப்படியான குற்றஞ்சாட்டப்படும் வழக்குகள் அதிகரிப்பதைக்கண்ட நீதிபதி சென்றகிழமைதான் இனிமேல் இப்படியான குற்றவாளிகளுக்குக் கூடிய தொகையான அபராதம் விதிக்கப்போவதாக அன்று இதே குற்றச்சாட்டுகளில் அகப்பட்டவர்களுக்குக் கூறினர். ந—நி

---

## டக்றர் கோபல்ஸ்

### காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்

பரிஸ செப் 27-

நாஜி அரசாங்கத்தின் பிரச்சாரமந்திரியான டக்றர் கோபல்ஸ் அவரது பதவியினின்றும் நீக்கப்பட்டுப் பிரசார இலாகாவின் "சவகாசஸ்தலத்தில்" பந்தோபஸ்தில் வைக்கப்பட்டுள்ளாரென "பெடிற் பிரிஸியென்" என்ற பத்திரிகையின் ஸ்டாக்ஹோம் நிருபர் கூறுகிறார்.

பணம் சம்பந்தமாகச் சில மறைமுகமான நடவடிக்கை எடுத்ததுதான் டக்றர் கோபல்ஸின் இந்த அவமானத்திற்குக் காரணம் எனவும், இப்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை எடுக்க ஹிட்லர் நீண்டகாலமாகத் திட்டமிட்டு வந்ததாகவும் அந்த நிருபர் கூறுகின்றார்.

---

## பேராசையாற் பெரும் நஷ்டம்

### அகவிலைக்கு அரிசி விற்றவருக்கு 2 மாதச்சிறை

அக் 3

புறக்கோட்டை மானிங்மார்க்கெட்டைச்சேர்ந்த எம். ஓ. உலகநாதபிள்ளை என்பவர் நிர்ணயிக்கப்பட்ட விலைக்குக் கூடுதலாக அரிசியை விற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கோறளை கொழும்பு தற்காலிக நீதிபதியினால இரண்டு மாதக் கடுங்காவற்றண்டனை விதிக்கப்பட்டார். இக்குற்றத்திற்கு உடந்தையாயிருந்தாரெனக் கூறப்பட்ட முத்தான் காயுடு விடுதலை செய்யப்பட்டார்.

### மற்றொரு வழக்கு

மருதானை பிச்சாட்லேனைச்சேர்ந்த மொஹிதீ என்பவர் சென்ற மாதம் அதிகப்படியான விலைக்கு மிளகுவத்தல் விற்றாரெனக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு கோறளைக் கொழும்பு தற்காலிக நீதிபதி முன்னிலையில விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்காளிபக்கத்தில இரு சாட்சிகள் விசாரணைசெய்யப்பட்டபின் வழக்கிற் பொய்மலிந்து கிடப்பதாகக் குறிப்பிட்டு நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

# அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு மு. சோம. அ. சோமசுந்தரம் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

| நம். | திக. | ரூபா | சத. | ஊர் பெயர் நகைவிபரம் |
|---|---|---|---|---|
| | 1938 ஜுன் | | | |
| 6776 | 9 | 62 | | அராலிகிழக்கு ந. துரைரத்தினம் இ. மி. முத்துவெள்ளை கட்டிய பென்டனுடன் பட்டம் வெட்டிய அட்டியல் 1 |
| 6863 | 17 | 16 | | வேலணைமேற்கு அ. தம்பையா இ. மி. கல்தோடு சோடி 1 |
| 6909 | 20 | 20 | | ஆனைக்கோட்டை க. வில்வலிங்கம் துண்டுவைத்தஅரைப்பவுண் 2 |
| 6963 | 26 | 9 | | அராலிதெற்கு ந. துரைரெத்தினம் இ. மி. கல்மோதிரம் 1 |
| | ஜூலை மாதம் | | | |
| 7031 | 3 | 15 | | தலையாளி சி. சுப்பிரமணியம் பின்கோர்க்கி 1 |
| 7056 | 5 | 9 | | கிறுந்தி வே. முருகேசன் இ. மி. வெள்ளைக்கல் மோதிரம் 1 |
| 7074 | 7 | 60 | | சாவகச்சேரி க. தம்பிப்பிள்ளை சாதாவளையல் காப்பு சோடு 1 |
| 7087 | 9 | 95 | | ஆனைக்கோட்டை சே. துரைராசா இ.மி. கல் டிம்மியுடன் முறிச்சுக் குத்தி அட்டியல் 1 |
| 7090 | 9 | 6 | 50 | அராலிதெற்கு மு. சபாபதிப்பிள்ளை இ. மி. கல் தோடுசோடி 1 |
| 7129 | 13 | 57 | | மானிப்பாய் த. புவனேஸ்வரன் அர்சுக்காப்பு சோடி 1 |
| 7130 | 13 | 12 | | மானிப்பாய் த. புவனேஸ்வரன் இ. மி. கல் தோடுசோடி 1 |
| 7134 | 13 | 27 | | குசவன்குளம் நா. வீரவாகு இ. மி. வெள்ளைக்கல் தோடுசோடி 1 தாலி 1 |
| 7191 | 18 | 8 | 50 | கோக்குவில் மேற்கு த. சிவஞானம் இ. மி. கல்வைத்த தக்கப் புறேச் 1 |
| 7207 | 18 | 110 | | வண்மேற்கு சி. அப்பையா இ. மி. கல் அச்சரக்கூடு கோர்த்த இரண்டு பட்டுக் துண்டுச் சங்கிலி 1 |
| 7232 | 20 | 210 | | தலையாளி சி. சுப்பிரமணியம் கோட்டை அரைப்பவுண் 4ம் துண்டு 2ம் கோர்த்த சாட்டுக்கோடி 1 |
| 7233 | 20 | 42 | | தலையாளி சி. சுப்பிரமணியம் இ.மி. கல் அச்சரக்கூடு 1-ம் வயிரச் சன்னம் இரண்டு கட்டிய கடுக்கன் சோடி 1 |
| 7243 | 21 | 8 | | கோண்டாவில் கிழக்கு சி. இராசரத்தினம் மிளகு பிள்ளைக் காப்புத் துண்டு 3 |
| 7259 | 22 | 60 | | ஐயனார்கோவிலடி அ. தனரத்தினம் இ. மி. வெள்ளைக்கல் பென்டனுடன் பட்டம் வெட்டிய அட்டியல் 1 |
| 7272 | 24 | 18 | | திருநெல்வேலி வ. சின்னையா இ. மி. கல்தோடு சோடி 1 |
| 7310 | 27 | 36 | | சாவகச்சேரி க. தம்பிப்பிள்ளை சாதா அர்சுப் பிள்ளைக் காப்பு சோடி 1 |
| 7321 | 29 | 25 | | நீர்வேலி ஞா. செல்லத்துரை துண்டுகள் கோர்த்த ஓட்டுத் தாலி சாட்டுக்கோடி 1 |
| 7344 | 31 | 8 | | கோண்டாவில் மு. சிவானந்தபிள்ளை மிளகுபிள்ளைக்காப்பு 1 |
| | ஆகஸ்டு | | | |
| 7350 | 1 | 90 | | உடுப்பிட்டி வே. தம்பு சாதா சங்கிலிக்கோடி 1 |
| 7362 | 1 | 80 | | வட்டுக்கோட்டைகிழக்கு சே. வல்லிபுரம் இ. மி. வெள்ளைக்கல் பென்டனுடன் பட்டம் வெட்டிய அட்டியல் 1 |
| 7384 | 2 | 50 | | பண்டத்தரிப்பு ம. இராசேந்திரம் இ. மி. வெள்ளைக்கல் முகப்புடன் இரண்டுபட்டுக் எகச்சங்கிலி 1-ம் சிகில் மோதிரம் 1 |
| 7408 | 4 | 16 | | கண்டிக்குளி க. யேம்லி இ. மி. கல் புறேச் 1 |
| 7422 | 4 | 20 | | வேலணை மேற்கு த. சிவஞானசம்பந்தர் இ. மி. வெள்ளைக்கல் புறேச் 1 |
| 7430 | 5 | 100 | | சோனகதெரு கு. காதல்கமீது பொன் அலுக்குத்து 21 |
| 7436 | 5 | 50 | | நல்லூர் சு. செல்லத்துரை சாதா முறுக்குக்குத்தி அட்டியல் 1-ம் பின் கொக்கி 1 |
| 7446 | 6 | 15 | | பறங்கித்தெரு த. கண்ணலிங்கம் கிளாவர் மோதிரம் 1 |
| 7452 | 7 | 10 | | தலையாளி சி. சுப்பிரமணியம் இ. மி. கல் பதக்கம் 1 |
| 7461 | 8 | 10 | | மல்லாகம் சு. கதிரிப்பிள்ளை இ. மி. கல் டிம்மி பதக்கம் 1 |
| 7466 | 8 | 68 | | கச்சேரிகிழக்கு ப. வேலுப்பிள்ளை இ. மி. கல் பதக்கத்துடன் சங்கிலி அட்டியல் 1 |
| 7486 | 10 | 18 | | அராலி கிழக்கு ந. துரைரத்தினம் இ. மி. வெள்ளை நீலம் கட்டிய சோதரா கம்பியுடன் புறேச் 1 |
| 7513 | 13 | 100 | | சங்கானை கிழக்கு ப. சிவரெத்தினம் இ. மி. முத்து சிகப்புக்கட்டிய பென்டனுடன் பட்டம் வெட்டிய அட்டியல் 1 |
| 7527 | 14 | 25 | | நல்லூர் இ. அம்பலவாணர் இ. மி. வெள்ளைக்கல் பென்டன் 1 |
| 7569 | 19 | 19 | | அராலிமேற்கு சி. செல்லையா சங்கிலி 1 |
| 7581 | 20 | 20 | | கைலாசபிள்ளையார் கோவிலடி நா. செல்லத்துரை துண்டு வைத்த முழுப்பவுண் 1 |
| 7601 | 22 | 35 | | வண்மேற்கு த. முத்தையா துண்டுகள் கோர்த்த ஓட்டுத்தாலி சாட்டுக் கோடி 1 |
| 7605 | 23 | 57 | | நல்லூர் இ. அம்பலவாணர் இ. மு. கல் முகப்புடன் கெட்டிக் காப்பு 1 |
| 7608 | 23 | 8 | | கொக்குவில் மேற்கு க. பொன்னையா மருக்கன் சிகப்புக்கல் சிமிக்கி வாளி சோடி 1 |
| 7644 | 27 | 75 | | வண்மேற்கு சி. கந்தசாமி இ. மி. கல் பதக்கத்துடன் முறிச்சுக்குத்தி அட்டியல் 1 |
| 7666 | 28 | 75 | | வண்மேற்கு பொ. சோமசுந்தரம் இ. மி. கல் முகப்புடன் அர்சுக் காப்பு சோடி 1 |
| 7695 | 30 | 17 | | நீர்வேலி ஏ. இரத்தினப்பத்தர் இ. மி. கல்தோடுசோடி 1 |
| 7716 | 31 | 12 | | நீர்வேலி இ. சின்னத்துரை தாலி 1 |

விற்பனவு நிகழும் பிரமாதி வருடம் ஐப்பசிமாதம் 3-ந் திகதி (20-10-39) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் எடுபட்டநகை பிறநீங்கலாக மீதிமேற்படியார் கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்
வே. மே.

Mis. 154 2—5-10-39


யாழ்ப்பாண

## ஐக்கிய வியாபாரச் சங்கம்

[வரைவுளது]

1918—ம் ஆண்டு ஸ்தாபிதமானது

அதிகாரம் பெற்ற மூலநிதி ரூபா—100,000

100 ரூபா விகிதமான 1000 பங்குகள்

சேமநிதி 23237—39

சென்ற 19 வருஷங்களுக்குக் கொடுபட்ட லாபம் ரூபா 800,00-00

வட இலங்கையில் தமிழ்மக்களால் ஒன்றுகூடி நடத்தப்படும் வியாபார நிலையம் இதுவொன்றே. தேசிய முன்னேற்றத்தை நோக்கி உங்களுடைய மிச்சங்களைக் கொண்டு சங்கத்தில் பங்குகளை எடுத்து வியாபாரத்தை மேலோங்கச் செய்வதற்கு முன்வாருங்கள். அத்துடன் கடையிற் சாமான்களை வாங்கி ஆதரியுங்கள். சென்ற வருஷங்களுக்கு நல்ல லாபம் கொடுபட்டன.

Y157. 24-10-38. to 23-10-39.) (வி)


## குருலிங்க சங்கமம்

முதலாம் பக்கத் தொடர்

ஜங்கு உண்டு. அவை காஞ்சிபுரத்தில் பிருதிவிமயமான ஏகாம்பரலிங்கமும், காவேரிதீரத்தில் அப்புமயமான ஜம்புகேசுரலிங்கமும், அருணாசலத்தில் அக்கினிமயமான அருணாசலலிங்கமும், பொன்முகலியாற்றில வாயுமயமான திருக்காளத்திலிங்கமும், சிதம்பரத்தில் ஆகாயமயமான திருமூலலிங்கமுமாம். இவ்வைந்து லிங்கங்களைக் கண்களினாற் றரிசித்தாலும் காதினாற் கேட்டாலும், வாயினாற் சொன்னாலும், மனத்தாற் றியானித்தாலும் இஷ்ட சித்தி எய்தப் பெறுவார்.

இவையன்றி, ஆதாரக்ஷேத்திரங்களுமுள்ளன. மூலாதார க்ஷேத்திரம் திருவாரூர். இதிற் சிவபெருமான் தியாகேசர் எனப்படுவர். சுவாதிட்டானம் திருவானைக்கா. அங்கே அவர் ஜம்புநாதர் எனப்படுவர். நாபித்தானமான மணிபூரகம் அருணாசலம். அங்கே அவர் அருணாசலேசுரர் எனப்படுவர். இருதயஸ்தானமாகிய அநாகதம் சிதம்பரம். அங்கே அவர் சபாபதி எனப்படுவர். கண்டத்தானமாகிய விசுத்தி திருக்காளத்தி. அங்கே அவர் காளத்திசுரர் எனப்படுவர். புருவ மத்தியஸ்தானமாகிய ஆஞ்ஞை காசி. அங்கே அவர் விசுவநாதர் எனப்படுவர். பிரமரந்திரம் கைலாசம். அங்கே அவர் ஸ்ரீகண்ட பரமேசுரர் எனப்படுவர். துவாதசாந்தம் மதுரை. இங்கே அவர் சுந்தரேசுரர் எனப்படுவர் என்று திருவிளையாடற் புராணமும் அகஸ்திய சங்கிதையும் கூறுகின்றன.

ஆன்மார்த்த பூசையில் உபயோகிக்கப்படும் இலிங்கங்கள் வாணலிங்கம் படிகலிங்கம் க்ஷணிகலிங்கம் முதலா

№ 109

கப் பலவகைப்படும். வாணாசுரன் என்பவன் ஒரு உழுந்து முதல் முழு மீருக உள்ள லிங்கங்களை பக்தாங் கொண்டு பூசித்தமையால் அவ்விலிங்கம் வாணலிங்கம் எனப்படும். இவ்விலிங்கங்களில் ஆவாஹனம் வேண்டியதில்லை. சிவபெருமான் எப்பொழுதும் சாந்நித்தியராய் இருந்தருளுவர். லிங்காத்திரி, கேபாளம் முதலிய இடங்களை அவன் பூசித்த இடங்களாம். வாணலிங்கம் முதலியன இட்ட லிங்கமாகப் பூசிக்கப்படின் சலலிங்கம் என்று சொல்லப்படும். பரார்த்தலிங்கமாகத் தாபிக்கப்படின் அசலலிங்கம் எனப்படும்.

பிராமணர் முதலிய நான்கு வருணத்தாரும் அனுலோமர் அறுவருஞ்சம இட்டலிங்கபூசைக்கு அதிகாரிகள். இவருள்ளும் இடம் பொருள் ஏவல் முதலியன உடையோராய், சிவபூஜாவிதி முதலியவற்றை நன்கறிந்தவராய் உள்ளவரே சிலை முதலியவற்றாலாகிய லிங்கத்தைப் பிரதிட்டை செய்வித்துக்கொண்டு சிவபூஜை செய்யலாம். மற்றையோர் க்ஷணிகலிங்கபூஜை செய்யக்கடவர். க்ஷணிகலிங்கமாவது பூசித்தவுடனே விடப்படும் இலிங்கமாம். க்ஷணிகலிங்கம் ஆறுமணல், சந்தனம் முதலாகப் பன்னிரண்டு பேதமாம்.

ஆன்மார்த்தபூசை செய்யாது பரார்த்தபூசை செய்தவர்கள் பூசையின் பயனை இழப்பார்கள். சிவலிட்டுனுக்களும் ஆன்மார்த்த பூசை செய்தே தங்கள் தங்கள் அதிகார கிருத்தியங்களைச் செய்வர். குருவுக்குச் சமதி கொடுத்து அவரிடத்தில் ஏற்றுப் பூசித்த லிங்கத்தை நன்கு பூசியாது இடையில் விடுத்தோர் மீளா நரகடைவர். "திருநாம மஞ்செழுத்தும் செப்பாராகில்" என்னும் தேவாரத்தால் உணரப்படும் சிவபூசை செய்யாது உண்டவனது உணவு உணவாகாது. அவன் சிவார்ச்சனையினின்று நீங்கிய முப்புரத்தசுரர் போலத் தண்டிக்கப்படுவன்.

(தொடரும்)


## திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரைவுளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.

ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.

உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(வி)

(Y. 182. 1-11-38 to 31-10-39)

## சைவாங்கில வித்தியாசாலை வெளியீடுகள்

ஆக்கியோன்
நவாலியூர் க. சோமசுந்தரப்புலவர்.)

1. நாமகள் போற்றிமாலை சதம். 3 | 2. நவராத்திரிவிரத வழிபாடு சதம். 6

3. கந்தபுராணக்கதைகளும் அவைகளுணர்த்தும் உண்மைநூற் கருத்தும் சதம். 50

இப்புஸ்தகங்கள் மேற்படி வித்தியாசாலை சைவ இளைஞர்சங்கத் தனாதிகாரியிடம் பெறற்பாலன.

நூற்றுக்கு மேலாகப் பிரதிகள் வாங்குவோர்க்கு 10வீதம் கழிவுகொடுக்கப்படும்.

(Mis. 146. 21-8-39—5-10-39.) வி.

## சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைச் குணப்படுத்தவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாரு, சாலாமூஸலி, சப்பேமுசவிலி, பிஸ்தான், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, ஜாதிப்பூ, லவங்கப்பட்டை, ஆக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிடுவதால் மேற்சொல்லியவியாதிகள் குணமடைவதுடன் ருதுவாயு பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்த தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரைருத்தலுக்கு ரூபா 10 கால்ருத்தலுக்கு ரூபா 5 தபாற்செலவுபிரத்தியேகம் சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாய் இராச்சியப்பகுதிக்கு வீ. பீ சட்டம் இல்லாததனால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய வைத்தியசாலை,
வீட்டிலக்கம் 33 பழையவாடி ரோட்டு, கோட்டைமுனை, மட்டக்களப்பு, சிலோன்.

Y6' (4-1-39 to 31-12-39)

## தயவுசெய்து எமக்கெழுதுங்கள்!

தூய்மையான கஸ்தூரி, சுத்தமான காஷ்மீர்க் குங்குமப்பூ, பரிசுத்தமான மூத்தி, சுத்தமான கோரோசனை, சிலாசத்து, அப்பர்கிரிஸ், பச்சைக் கர்ப்பூரம், பொன் வெள்ளி இலைகள் இவைபோன்ற வேறு விலையுயர்ந்த பொருள்களும் மருந்து வகைகளுக்கு வேண்டிய அருமையான மூலிகைகளுந் தேவைப்படும் போது எங்களுக்கு எழுதுங்கள். பிரசித்தி பெற்ற டாக்டர்களும் வைத்திய நூலறிஞர்களும் எமது சரக்குகளை ஆராய்ந்து அவை மிக்க திருப்தியளிப்பவை என்றும் திறமானவையென்றும் கண்டிருக்கின்றனர். அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கும் மகாராஜாக்களின் பிரதான டாக்டர்களுக்கும் நாமே இவற்றை உதவி வருகிறோம்.

பூரண விபரங்களை அறிய விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதுக:-

பாலா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர் செய்யப்பட்டது)
கஸ்தூரி & பெருங்காய வியாபாரிகள், ஆயுர் (ஜலுச்அர்) பஞ்சாப்

(Y. 64. 14-6-39—13-6-40) வி.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai Jaffna on Thursday October 5th 1939.